செ.வெ.எண்:252 நாள்: 17.04.2018

**திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் வட்டம் மைப்பாறை கிராமத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோவில் பள்ளிச்சிறார் நல்லொழுக்கம் மற்றும் நன்னெறி பாடசாலையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் வட்டத்தில் உள்ள மைப்பாறை கிராமத்தில் ஒரு புதமையான முயிற்சியாக பள்ளிச்சிறார் நல்லொழுக்கம் மற்றும் நன்னெறி பாடசாலை துவக்கி வைக்கப்பட்டது இப்பாடசாலையில் பள்ளி சிறார்களுக்கு வார இறுதி நாட்களில் நல்லொழுக்கம் மற்றும் நன்னெறிக் கல்வி புகட்டப் படும் இன்றைய சமுதாய வளர்ச்சி முறையில் பொருள் ஈட்டுவதே முதன்மையானதும் இறுதியானதும் என்று கருதப்படுகிறது.இதன் காரணமாக தனி மனத ஒழுக்கம் சிதறிபாழ்படுகிறது.இதனை மனதில் கொண்டு மேற்சொன்ன பாடசாலை அமைக்கத் திட்டமிடப்பட்டு மைப்பாறை கிராமத்தை சேர்ந்த ஒய்வு பெற்ற திரு.ஜி.ராமகிருஷ்ணன்இ.ஆ.ப., அவர்கள் முயிற்சியால் இப்பாடசாலையை துவக்கப்பட்டுள்ளது. மைப்பாறை மற்றும் சுற்று வட்டார கிராம பள்ளிச்சிறார்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நன்னெறு பாடசாலையை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள்,மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி